*40*

# கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கிறார்

## (ரோமர் 8)

*ரோமர் 8ம் அதிகாரம், தேவனுடைய ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு உதவுதல் பற்றிக்கூற அதிகமானவற்றைக் கொண்டுள்ளது. இதன்மீதான விளக்கங்கள் ரோமர் 8ன் மீதான பாடங்கள் முழுவதிலும் பரவலாக உள்ளன. இந்தத் தலைப்பிற்கான திறவுகோல் அம்சங்களை ஒரு தனிப்பாடத்தில் ஒன்றுகூட்ட நீங்கள் விரும்பலாம். பின்வரும் எடுத்துரைப்பு இது செய்யப் படுவதற்கான ஒரு வழியாக இருக்கலாம். எல்லாச் சிந்தனைகளும் எவ்வாறு ஒன்றாகப் பொருத்தப்படக்கூடும் என்று காண்பிக்கச் சில கருத்துகள் திரும்பவும் கூறப்பட்டுள்ளன, ஆனால் இங்கு முன்வைக்கப்பட்ட அடிப்படைக் கருத்துக்கள் மற்ற பாடங்களிலிருந்து துணைக்கருத்துக்களைப் பெறச்செய்தல் அவசியமா யிருக்கும்.*

### பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு எவ்வகையான உதவியை அளிக்கிறார்?

நாம் ஞானஸ்நானம் பெறுகிறபோது, தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியான வரை ஒரு கொடையாக அளிக்கிறார் (நடபடிகள் 2:38; 5:32; கலாத்தியர் 4:6ஐக் காணவும்). தொடக்ககால சபையிலும்கூட, கிறிஸ்தவர்கள் அற்புதங்களை நிகழ்த்தக்கூடியவராகுதல் என்பது இவ்வரத்தின் நோக்கமாக இருக்கவில்லை. (எல்லாக் கிறிஸ்தவர்களும் இவ்வரத்தைப் பெற்றிருந்தனர், ஆனால் எல்லாரும் அற்புதங்களை நிகழ்த்தக்கூடாதிருந்தது.) இந்த வரத்தின் நோக்கம் என்னவாக *இருந்தது?* இன்றையநாளில் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்குப் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கிறார்?

விலகியிருக்கும் பாவி கொண்டிராத சிலவற்றைக் கிறிஸ்தவர் கொண்டிருக் கிறார்.[1] பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு *எல்லாவற்றையும்* செய்வ தில்லை, ஆனால் அவர் *சிலவற்றைச்* செய்கிறார். பிலிப்பியர் 1:19ல் பவுல், "ஆவியின் உதவி" பற்றிக் குறிப்பிட்டார். "உதவி" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தையானது, "*ஏராளமான அளிப்பு*" என்பதைக் குறிக்கிறது. தேவன் தமது ஆவியானவர் மூலமாக நமக்கு ஏராளமானவற்றை அளித்திருக் கிறார்.

ரோமர் 8ம் அதிகாரமானது, தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய கிரியை மீதான முக்கியமான வசனப்பகுதியாக உள்ளது. இந்த அதிகாரம், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இருபதுக்கு நெருங்கிய முறைகள் குறிப்பிடுகிறது. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு என்ன செய்கிறார் என்பதைக் கற்க நாம் ரோமர் 8ஐ ஆய்வுசெய்வோமாக.

## வாழ்வின்மீது வெற்றி (8:1-10)

1ம் வசனத்தின், "ஆனபடியால்" என்பது மனித ஆவியின் தோல்விபற்றிப் பேசிய 7ம் அதிகாரத்தை குறிக்கிறது (7:15, 18, 19, 24 ஆகிய வசனங்களைக் காணவும்). இருப்பினும் இப்போது, ஒரு புதிய கூறு கூட்டப்பட்டுள்ளது: தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் (8:1, 2, 4, 5, 9). ஆவியானவர் மூலமாக, நாம் தோல்விக்குப் பதிலாக வெற்றியைக் கொண்டிருக்க முடியும்.

## மரணத்தின்மீது வெற்றி (8:11)

தேவனுடைய வல்லமையினால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப் பட்டார். அதுபோலவே, நமக்குள் வாசம்பண்ணுகிற ஆவியானவர் மூலமாக நாமும் உயிர்ப்பிக்கப்படுவோம். நல்லவர்கள் பொல்லாதவர்கள் ஆகிய எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவர் என்பதால் (யோவான் 5:28, 29), ரோமர் 8:11 <u>நித்திய ஜீவனுக்கென்று</u> உயிர்ப்பிக்கப்படுதலைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்.

## சோதனையின்மீது வெற்றி (8:13)

7ம் அதிகாரத்தில் பவுல், "இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று கேட்டார் (வசனம் 24). 8ம் அதிகாரத்தில், அவர் ஆவியானவரால், நாம் சரீரத்தின் செய்கைகளை அழிக்க முடியும் என்று கூறினார் (வசனம் 13). வேறொரு இடத்தில், பவுல் நாம் ஆவியானவரால் நமது உள்ளான மனுஷனில் பலப்படுகிறோம் என்று கூறினார் (எபேசியர் 3:16; வசனம் 20ஐக் காணவும்). மக்கள், "என்னால் கிறிஸ்தவ வாழ்வை வாழமுடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டவுடனே நான் கிறிஸ்தவனாவேன்; நான் அப்போது ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வேன்" என்று கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக *இல்லாமல்* - தேவனுடைய ஆவியானவரின் உதவியைக் கொண்டுள்ள தேவனுடைய பிள்ளையாகாமல் - கிறிஸ்தவ வாழ்வை வாழ இயலாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

## தீர்மானமற்ற தன்மையின்மீது வெற்றி (8:14அ)

வேதாகமம் முழுவதிலும் தேவன் தமது மக்களை "வழிநடத்துவதாக" கூறப்படுகிறது. ரோமர் 8:14, பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை வழிநடத்துவதைக் குறிக்கிறது. இரு கடைமுனை நிலைப்பாடுகள் தவிர்க்கப் பட வேண்டும். முதலாவது, தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் ஆவியானவரே பொறுப்பாளியாக இருக்கிறார் என்று உரிமைகோருபவர்களால் பற்றிபிடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது, பரிசுத்த ஆவியானவர் *எவ்வகையிலாவது* தங்கள்மீது செல்வாக்குக் கொண்டிருப்பதை

மறுக்கும் கிறிஸ்தவர்களினால் பற்றிப்பிடிக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பலவழிகளில் வழிநடத்தக்கூடும். அவர் ஏவியுள்ள வசனத்தின்மூலமாக வழிநடத்துதல் என்பதே (எபேசியர் 6:17) மிகவும் தீர்மானமான (மற்றும் மிகவும் தனித்தன்மை வாய்ந்த) வழியாக உள்ளது. "திறந்த கதவுகள்" (1 கொரிந்தியர் 16:9ஐக் காணவும்) போன்ற தெய்வீக அளிப்பின் (ரோமர் 8:28) மற்ற சாத்தியக் கூறுகள் உள்ளடங்குகின்றன. அவர் நமது மனச்சாட்சி அல்லது தேவபக்தியுள்ள நண்பர்களின் ஆலோசனை மூலமாகவும் நம்மை வழிநடத்த முடியும். "எவ்வாறு" என்பது பற்றி நாம் உபதேசரீதியாகக் கூற இயலாது. தேவன் நமது வாழ்வில் செயல்படுகிறார் என்பதே நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விஷய மாக உள்ளது (சங்கீதம் 37:23ஐக் காணவும்).

## நிச்சயமற்ற தன்மையின்மீது வெற்றி (8:14ஆ-17, 23)

நாம் ஞானஸ்நானம் பெறும்போது தேவன் தமது ஆவியை நமக்குக் கொடுக்கிறார் என்பது, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்கும் அவரது சுதந்தரவாளிகள் என்ற வகையில் சகல ஆசீர்வாதங்களையும் கொண்டிருக்கிறோம் என்பதற்கும் வல்லமைநிறைந்த ஆதாரமாக உள்ளது. 23ம் வசனம், நாம் "ஆவியின் முதற்பலன்களை" பெற்றிருக்கிறோம் என்று கூறுகிறது. விளைச்சலின் "முதற்பலன்கள்," அவ்விளைச்சலின் எஞ்சிய பகுதிக்கு உத்தரவாதமாக இருந்தன. "முதற்பலன்கள்" என்பது எபேசியர் 1:13, 14 மற்றும் 2 கொரிந்தியர் 1:21, 22; 5:5 ஆகியவற்றிலுள்ள "அச்சாரம்" என்பதற்கான அதே அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் நமக்குப் பரலோகத்தின் "உத்தரவாதமாக" இருக்கிறார். ரோமர் 8:16ம் வசனம், "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" என்று கூறுகிறது. தேவன் தமது ஆவியானவர் மூலமாக நமக்கு என்ன செய்கிறார் என்பதை நாம் காணுகையில், அவர் நம்மீது அன்புகூருகிறார் என்பதும் நாம் அவரது பிள்ளைகளாக இருக் கிறோம் என்பதும் நமக்கு நிச்சயப்படுத்தப்படுகிறது. இது நமக்குத் தைரியம் அளிக்க வேண்டும்!

## நமது பலவீனங்கள்மீது வெற்றி (8:26, 27)

நாம் யாவருமே சில வேளைகளில் பலவீனமாக உணருகிறோம். பரிசுத்த ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவுகிறார். "உதவுகிறார்" என்பது "எதிர்ப்புறத்தின்" மீது "எடுத்துக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிற கூட்டு வார்த்தை ஒன்றிலிருந்து வருகிறது. ஒரு நபருக்கு மிகவும் கனமாக உள்ள ஒரு பெரிய பொருளை எடுக்க முயற்சித்தலைப் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள். பின்பு அந்தப் பொருளின் எதிர்முனையில் யாரோ ஒருவர் *உங்களுடன் சேர்ந்து* அப்பொருளைத் தூக்குதல் பற்றிக் கற்பனை செய்துகொள்ளுங்கள். வாழ்வில் உங்கள் அறைகூவல்களைப் பொறுத்தமட்டில் அந்த யாரோ ஒருவர் பரிசுத்த ஆவியானவராக இருக்கிறார், அவர் உங்களால் தனியே செய்ய இயலாதவற்றில் உங்களுக்கு உதவுகிறார். 26ம் வசனம், பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுதல் பற்றிக் குறிப்பான ஒரு விவரிப்பைத் தருகிறது: நாம் ஜெபிக்கும்போது அவர் நமக்கு உதவுகிறார்.

## முடிவுரை

*பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வில் செயல்படத் தொடங்குமுன், அவரைப் பற்றிய எல்லாவற்றையும் நான் அறிந்துகொள்ள வேண்டுமா? இல்லை. "ஆவியின்படி நடந்துகொள்ளுதல்" என்பதே (வசனம் 4) நமது வாழ்வில் ஆவியானவர் செயல்படத் திறவுகோலாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் நமக்குக் கொடுத்துள்ளவையாகக் காணப்படும் அறிவுறுத்தல்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசமாயிருக்கிறாரா? இல்லையென்றால், நீங்கள் இயேசுவுக்குச் சொந்தமானவரல்ல (வசனம் 9): நீங்கள் ஞானஸ்நானம் பெற்று இந்த அற்புதமான கொடையைப் பெறுதல் அவசியமாக உள்ளது!*

---

குறிப்பு

[1]*விலகியிருக்கும் பாவியின்மீது (ஒருக்காலும் கிறிஸ்தவராக இருந்திராதவர் மீது) "ஆவியானவரின் நேரடி இயக்கம்" பற்றி வேதாகமம் போதிப்பதில்லை என்பதை வலியுறுத்துங்கள்.*